# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081700

1. District மாவட்டம் : Kanyakumari PS: காவல்நிலையம் Kanyakumari VEAC Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 07 Date: நாள் 05.11.2022

2. (i) Act சட்டம்: Code of Criminal Procedure Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: PC Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: Sec 7
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 04.11.2022 Date to : நாள் வரை 05.11.2022
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 19.00hrs Time to : நேரம் வரை 05.00hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.11.2022 Time : நேரம் 14.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Eraniel Sub Registrar office
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. C. Lenin. (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Revenue Inspector Agasteeswaram Taluk (g) Address : முகவரி Revenue Inspector Agasteeswaram Taluk Kanyakumari District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) C. Subbiah S/o. Chellathangam Assistant I/c. Sub Registrar I/c Sub Registrar office Eraniel.
   (2) S. Ramkumar @ Raghu S/o. Sivananthram
   (3) T. Jeya w/o. Cross Jeyarajan
   (4) R. Rajesh S/o. Raveendran.
   (5) B.S. Kalaiselvan S/o. Balakrishnan
   (6) M. Kumar S/o. Madhavanpillai
   (7) R. Sufi w/o. Raja.
   (8) S.J. Subashini D/o. Sundaram Pillai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — No Delay —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— Seperate Sheet Enclosed —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Mr. John Benjamin Rank Inspector of police to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 05.11.2022 @ 17.00 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. PETER PAUL DURAI.
Rank: நிலை Dy. Supdt. of police ..No. எண் ..........
VACB, Kanyakumari Detachment @ Nagercoil.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 7/2022 முதல் தகவல் அறிக்கை வரிசை எண் 12-ன் இணைப்பு :-</u>

மதிப்பிற்குரிய அய்யா,

<u>குற்ற அலுவலர்கள் :-</u>

1. C.சுப்பையா, வயது-58.
S/o.செல்லத்தங்கம்
உதவியாளர், (பொறுப்பு) சார்பதிவாளர்
இரணியல் சார்பதிவாளர் அலுவலகம்
கன்னியாகுமரி மாவட்டம்.

2.S.ராம்குமார் @ ரகு வயது-40
S/o சிவாநந்தம்
4/93C வசந்தம் நகர், பார்வதிபுரம்
நாகர்கோவில்

3.T.ஜெயா வயது-43
W/o கிராஸ் ஜெயராஜன்
3/82A சரல்விளை, ஆலமூடு அஞ்சல்

4.R.ராஜேஷ் வயது-35
S/o ரவீந்திரன்
21-144 ஆசாரிவிளை, பள்ளியாடி

5.B.S.கலைசெல்வன் வயது-34
S/o பாலகிருஷ்ணன்
20-130 சரல்விளை, வயக்கரை
மூளகுமூடு அஞ்சல்

6.M.குமார் வயது-49
S/o மாதவன்பிள்ளை
5/43 A1 புலியூர்குறிச்சி, தக்கலை

7.R.சுஜி வயது-40
W/o ராஜா
35/7-1D கமலா பவனம், வயல் தெரு
வடலிவிளை, கோட்டார், நாகர்கோவில்

8.S.J.சுபாஷினி வயது-28
D/o சுந்தரம்பிள்ளை
TVS Courier Building
இரணியல் ரோடு, தக்கலை

பணிந்து சமர்பிக்கப்படுகிறது :- இன்று 05.11.2022 மதியம் 14.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் துணை கண்காணிப்பாளர் S.பீட்டர் பால் துரை ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது திரு.சி.லெனின், வருவாய் ஆய்வாளர், சுசீந்திரம் குறுவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன், செயல்முறை நடவடிக்கை நாள் 04.11.2022, வாக்குமூலங்கள் மற்றும் பணம் ரூ.4,48,800/- ஆகியவற்றை இணைத்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் திரு.சி.லெனின், வருவாய் ஆய்வாளர், சுசீந்திரம் குறுவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம். பெறுநர் உயர்திரு.துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில் அய்யா நான் 4.11.2022-ம் தேதி மாலை சுமார் 5.30 மணிக்கு அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாராந்திர ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு இருந்தப்பொழுது மாவட்ட ஆட்சியரின் அலுவலக ஊசூர் மேலாளர் அவர்களின் உத்தரவுப்படி நான் கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்ணாணிப்பு துறை துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களை, நேரில் சென்று சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் இரணியல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு, வில்லங்கம், நகல் எடுப்பு மற்றும் பதிவு செய்வது சம்பந்தமான வேலைகளுக்கு வரும் பொதுமக்களிடம் சார் பதிவாளர் லஞ்சம் பெற்று வருவதாகவும் லஞ்ச பணத்தை அலுவலக நேரம் முடிந்த பின் அவர் வெளியே செல்லும்போது புரோக்கர்களான பத்திர எழுத்தர்கள் மூலம் பணம் வசூலித்து பெற்று செல்வதாக ரகசிய தகவல் கிடைத்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் திடீர் இணை ஆய்வு செய்ய கேட்டுக்கொண்டதன்படி, நான், காவல் துணை கண்காணிப்பாளர் , காவல்

ஆய்வாளர்கள் மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் 04.11.2022-ம் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொண்டோம். இந்த இணை ஆய்வின் போது இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் திரு.C.சுப்பையா, உதவியாளர் (i/c) சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்களும் ஆஜரில் இருந்தனர். சார்பதிவாளர் அலுவலகத்தில் சோதனை செய்த போது அங்கு நின்று கொண்டிருந்த திங்கள்சந்தையை சார்ந்த பத்திர எழுத்தர் திருமதி.இராஜேஸ்வரி என்பவரின் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.ராம்குமார் என்ற ரகு என்பவரிடமிருந்து ரூ.40800-ம் இரணியலில் பத்திர எழுத்து அலுவலகம் வைத்திருக்கும் திரு.டேவிட் என்பவரிடம் உதவியாளராக பணிபுரியும் திருமதி.ஜெயா என்பவரிடம் ரூ.50000-ம், ஆலந்துறை, பள்ளியாடியில் PRS என்ற பெயரில் பத்திர எழுத்து அலுவலகம் வைத்திருக்கும் பத்திர எழுத்தர் திரு.ராஜசுந்தரம் என்பவரின் அலுவலகத்தில் உதவியாளர்களாக பணிபுரியும் திரு.ராஜேஷ் என்பவரிடம் ரூ.44300-ம், திரு.கலைச்செல்வன் என்பவரிடம் ரூ.16500-ம் தக்கலை பேலஸ் ரோட்டில் S.V.என்ற பெயரில் பத்திர எழுத்து அலுவலகம் வைத்திருக்கும் திருமதி.சுஜி என்பவரிடம் ரூ.50000-ம் அவரது அலுவலக உதவியாளர் திருமதி.சுபாஷினி என்பவரிடமிருந்து ரூ.41000-ம் திங்கள்சந்தையில் வழக்கறிஞர் திரு.ஜோசப்ராஜ் என்பவரிடம் உதவியாளராக இருக்கும் திரு.குமார் என்பவரிடம் ரூ.157000-ம் கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் குறித்து அவர்களிடம் கேட்டபோது சரியாக முகாந்திரம் கூறாததால் அது சார்பதிவாளருக்கு கொடுப்பதற்காக வைத்திருக்கும் லஞ்சப்பணமாக இருக்கலாம் என்று கருதி செயல் முறை நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும் சார்பதிவாளர் அலுவலக மெயின் ஹாலில் மேற்கு பக்கம் அமைந்துள்ள ஓய்வு அறையில் மேஜையின் மீது அமைந்திருந்த ஆவணங்களின் உள்ளேயும் , மேஜை விரிப்புக்கு அடியிலும் சொருகி வைக்கப்பட்டிருந்த ரூ.8800-ம் சோதனையின் போது கைப்பற்றப்பட்டது. மேலும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே உள்ள கணினி அறையில் திருமதி.சுபா மற்றும் நாகராஜன் ஆகிய தற்காலிக பணியாளர்கள் அமர்ந்திருந்த அறையில் சோதனை செய்த போது ஆவணங்களின் அடியிலும் , CD வைக்கப்பட்டிருந்த அட்டை பெட்டியின் உள்ளேயும் ரூ.18200-ம் காணப்பட்டது. மேலும் சார்பதிவாதளர் இருக்கையின் அருகில் போடப்பட்டிருந்த முத்திரை பதிக்கும் மேஜையில் ஆங்காங்கே மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூபாய் நோட்டுகளை எண்ணிப்பார்த்த போது ரூ.15000-ம் காணப்பட்டது. சார்பதிவாளர் இருக்கையின் அருகில் குப்பை போட வைக்கப்பட்டிருந்த அட்டை பெட்டியை சோதனை செய்த போது அதில் பொட்டலம் போடப்பட்ட ரூ.4200-ம் காணப்பட்டது. மேலும் சார்பதிவாளர் இருக்கைக்கு வலது புறம் இருந்த இளநிலை உதவியாளர் திரு.மோகன்பாபு என்பவரின் மேஜையினை சோதனை செய்த போது மேஜையின் வலது பக்க டிராயரில் ரூ.3000 காணப்பட்டது. மேற்படி பணம்குறித்து சார்பதிவாளர் திரு. சுப்பையா மற்றும் அலுவலக

பணியாளர்களிடம் கேட்ட போது தங்களுக்கு அதுபற்றி தெரியாது என்று தெரிவித்தபடியால் அவை லஞ்சப்பணமாக இருக்கலாம் என்று கருதி மேற்படி பணமானது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சார்பதிவாளர் மேஜையில் அவரது கைப்பட அன்றைய தினம் அவரால் பதிவு செய்யப்பட்ட மொத்த ஆவணங்கள் மற்றும் பத்திர எழுத்தர்கள் விபரங்கள் அடங்கிய காகிதம் ஒன்றும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.448800 –ம் ரூபாய் நான்கு லட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து எண்ணூறு மற்றும் ஆவணங்களையும் செயல்முறை நடவடிக்கைகள் குறிப்பு தயார்செய்து மேல்நடவடிக்கைக்காக இணைத்துக் கொடுக்கிறேன். இதன் மூலம் இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள உதவியாளர் பொறுப்பு சார்பதிவாளர் திரு.C.சுப்பையா அவர்கள் பத்திர எழுத்தர்கள் மற்றும் அவர்கள் உதவியாளர்கள் மூலம் லஞ்சம் பெற்று அரசு பணிகள் செய்துவருவது தெரியவருகிறது. இதன்மூலம் அரசு அலுவலர்களுக்கு அரசு பணியை செய்வதற்கு இடைதரகர்கள் லஞ்சம் கொடுக்க தூண்டியுள்ள குற்ற செய்கையும் புலனாகிறது. மேலும் பொது ஊழியர்கள் லஞ்சம் பெற்று குற்ற நடவடிக்கையில் (Criminal Misconduct) ஈடுபட்டுள்ளதும் தெரியவருவதால் தக்க மேல்நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள sd xx 05.11.2022,Revenue Inspector, Suchindram, Agasteeswaram Taluk @ Nagercoil. Sir, Received this complaint today on 05.11.2022 at 14.00 hrs and after verification I registered a case in V&AC, Kanyakumari Detachment, Nagercoil Cr.No.7/2022 U/s 102 Cr.PC and Sec 7 of Prevention of Corruption Act 1988 (Ammended in 2018) on 05.11.2022 at 14.00 hrs. கன்னியாகுமரி மாவட்ட வருவாய் ஆய்வாளர், அகஸ்தீஸ்வரம் தாலுகா அலுவலகம், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை நடவடிக்கை. இன்று 04.11.2022-ம் தேதி மாலை சுமார் 07.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் ஜங்சனிலிருந்து திங்கள் சந்தை செல்லும் மெயின் ரோடில் இரணியல் காவல்நிலையம் செல்லும் சாலைக்கு வலதுபக்கம் அமைந்துள்ள இரணியல் சார் பதிவாளர் அலுவலகத்தில் திரு.C.லெனின், வருவாய் ஆய்வாளர், அகஸ்தீஸ்வரம் தாலுகா அலுவலகம், நாகர்கோவில் அவர்கள் தலைமையில் கீழ்க்கண்ட அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்ற திடீர் இணை ஆய்வின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை குறிப்பு. முன்னிலை: 1) திரு.S.பீட்டர் பால் துரை, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். 2) திரு.S.ஜாண்பெஞ்சமின், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். 3) திருமதி.C.சிவசங்கரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு,

நாகர்கோவில். கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் ஜங்சனிலிருந்து திங்கள் சந்தை செல்லும் மெயின் ரோடில் இரணியல் காவல்நிலையம் செல்லும் சாலைக்கு வலதுபக்கம் அமைந்துள்ள இரணியல் சார் பதிவாளர் அலுவலகமானது மேற்கு பார்த்த வாசலும், தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய காங்கீரிட் கட்டிடத்தில் இயங்கிவரும் இரணியல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு, வில்லங்கம், நகல் எடுப்பு மற்றும் பதிவு செய்வது சம்பந்தமான வேலைகளுக்கு வரும் பொதுமக்களிடம் சார் பதிவாளர் லஞ்சம் பெற்று வருவதாகவும் லஞ்ச பணத்தை அலுவலக நேரம் முடிந்த பின் அவர் வெளியே செல்லும்போது புரோக்கர்களான பத்திர எழுத்தர்கள் மூலம் பணம் வசூலித்து பெற்று செல்வதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் இன்று 04.11.2022-ம் தேதி மாலை சுமார் 06.00 மணி முதல் இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தின் வெளியே ஆங்காங்கே சந்தேகம் வராதவாறு காத்திருந்து இரவு சுமார் 07.00 மணியளவில் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு செய்வதற்காக அலுவலகத்துக்கு உள்ளே வரப்பட்டது. அப்போது பின்னர் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்த திரு.C.சுப்பையா, உதவியாளர் (i/c) சார்பதிவாளர் அவர்கள் அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரது வலது பக்க இருக்கையில் தற்காலிக பணியாளரான திருமதி.D.சுபா, IP Camera Operator-ம், அவருக்கு அருகில் திரு.A.மோகன்பாபு, இளநிலை உதவியாளரும், சார்பதிவாளர் இருக்கையின் வலது பக்கம் முன்பாக திரு.E.முருகப்பெருமாள், அலுவலக உதவியாளரும் அமர்ந்திருந்தார். அலுவலக வரவேற்பாளர் அறையில் சொத்து விற்பனை செய்பவர்கள், அதனை வாங்குபவர்களும், சார்பதிவாளர் அலுவலக மெயின் அறையில் திங்கள் சந்தை SBI வங்கி எதிரில் பத்திர எழுத்து அலுவலகம் வைத்திருக்கும் பத்திர எழுத்தர் திருமதி.ராஜேஸ்வரி அவர்களின் அலுவலக உதவியாளர்கள் திரு.S.ராம்குமார் என்ற ரகு என்பவரும், இரணியல் பவித்திரா காம்பளக்ஸில் பத்திர எழுத்து அலுவலகம் வைத்திருக்கும் பத்திர எழுத்தர் திரு.டேவிட் அவர்களின் அலுவலக உதவியாளர் திருமதி.T.ஜெயா என்பவரும், ஆலத்துறை, பள்ளியாடி PRS என்ற பெயரில் பத்திர எழுத்து அலுவலகம் வைத்திருக்கும் பத்திர எழுத்தர் திரு.P.ராஜசுந்தரம் அவர்களின் அலுவலக உதவியாளர்களான திரு.R.ராஜேஸ் மற்றும் திரு.B.S.கலைச்செல்வன் என்பவரும், தக்கலை பேலஸ் ரோட்டில் உள்ள ஜெயராஜ் பில்டிங்கில் S.V. என்ற பெயரில் பத்திர எழுத்து அலுவலகம் வைத்திருக்கும் திருமதி.சுஜி மற்றும் அவரது உதவியாளர் திருமதி.சுபாஷினி ஆகியோர்களும், இரணியல் காவல் நிலையத்தின் அருகில் வழக்கறிஞர் திரு.ராபர்ட்சிங் என்பவர் வைத்திருக்கும் அலுவலகத்திற்கு பத்திர பதிவிற்காக வரும் பத்திரங்களை தயார் செய்தும், திங்கள் சந்தை SBI வங்கி அருகில் ஜாண்சன் காம்பளக்ஸில் வழக்கறிஞர் திரு.ஜோசப்ராஜ் என்பவர் வைத்திருக்கும் அலுவலகத்திற்கு பத்திர பதிவிற்காக வரும் பத்திரங்களை தயார்

செய்து வழக்கறிஞரிடம் கையொப்பம் பெற்று பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவிற்கு உதவியாக இருக்கும் திரு.M.குமார் என்பவரும் நின்று கொண்டிருந்தார்கள். அலுவலகத்தின் வரவேற்பாளர் அறையில் நின்று கொண்டிருந்த நபர்களை விசாரித்த போது தாங்கள் பத்திர பதிவு முன்னுரிமை வரிசைபடி நின்று கொண்டிருப்பதாக தெரிவித்தார். அவர்களை சோதனை செய்த போது அவர்கள் செலவுக்கு வைத்திருந்த பணங்களை தவிர சந்தேகப்படும் படியாக பணங்கள் ஏதுமில்லை. எனவே அவர்களை சோதனை முடித்து அலுவலகத்தின் வெளியே அனுப்பப்பட்டது. அதன்பிறகு அலுவலக மெயின் ஹாலில் நின்றுகொண்டிருந்த மேற்குறிப்பிட்ட திங்கள் சந்தை SBI வங்கி எதிரில் பத்திர எழுத்து அலுவலகம் வைத்திருக்கும் பத்திர எழுத்தர் திருமதி.ராஜேஸ்வரி அவர்களின் அலுவலக உதவியாளர்கள் திரு.S.ராம்குமார் என்ற ரகு என்பவரை விசாரித்த போது அவர் இன்றைய தினம் 4 பத்திரங்கள் பதிந்ததாகவும் வரும் நாள்களில் பத்திரம் பதிய வேண்டி இருப்பதாகவும், அது சம்மந்தமாக சந்தேகம் கேட்க வந்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்த போது அவர் அணிந்திருந்த பேண்ட் வலது பக்க பாக்கெட்டிலிருந்து ரூபாய் 36,000/-ம், சட்டை பாக்கெட்டிருந்து ரூபாய் 4,800/-ம் ஆக மொத்தம் ரூபாய் 40,800/-கைப்பற்றப்பட்டது. இந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அந்த பணம் தனது சொந்த பணம் என்றும் தெரிவித்தார். அவர் கூறிய விளக்கத்திற்கு சரியான முகாந்திரம் இல்லாததாலும், பணத்துடன் அலுவலகத்தில் நின்று கொண்டிருந்ததால் பத்திர பதிவு அலுவலர்களுக்கு லஞ்சம் கொடுக்க வைத்திருந்த பணம் என கருதி அந்த பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் இரணியல் பவித்திரா காம்பளக்ஸில் பத்திர எழுத்து அலுவலகம் வைத்திருக்கும் பத்திர எழுத்தர் திரு.டேவிட் அவர்களின் அலுவலக உதவியாளர் திருமதி.T.ஜெயா என்பவரை விசாரித்த போது அவர் இன்றைய தினம் 3 பத்திரங்கள் பதிந்ததாகவும் வரும் தினங்களில் பத்திரங்கள் பதிய வேண்டி இருப்பதில் உள்ள சந்தேகம் கேட்க வந்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்த போது அவர் கையில் வைத்திருந்த பழைய ஆவணத்தின் உள்ளே 500 ரூபாய் நோட்டுகள் 100 எண்ணம் மொத்தம் ரூபாய் 50,000/- ஒரே கட்டாக காணப்பட்டது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்ட போது மேற்படி சீர்திருத்த ஆவணத்திற்கான Online கட்டணம், Stamp, எங்களுடைய ஊதியம் மற்றும் சார்பதிவாளர் அலுவலக செலவு ஆகியவற்றுக்காக கையில் வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கத்திற்கு சரியான முகாந்திரம் இல்லாததாலும் பணத்துடன் அலுவலகத்தில் நின்று கொண்டிருந்ததால் பத்திர பதிவு அலுவலகளுக்கு லஞ்சம் கொடுக்க வைத்திருந்த பணம் என கருதி அந்த பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் ஆலத்துறை, பள்ளியாடி PRS என்ற பெயரில் பத்திர எழுத்து அலுவலகம் வைத்திருக்கும் பத்திர எழுத்தர் திரு.P.ராஜசுந்தரம் அவர்களின் அலுவலக உதவியாளர்களான திரு.R.ராஜேஸ் மற்றும் திரு.B.S.கலைச்செல்வன்

ஆகியோர்களை விசாரித்த போது இன்றைய தினம் தங்கள் அலுவலகத்திலிருந்து 2 பத்திரங்கள் பதிந்தாக தெரிவித்தார். அவர்களை சோதனை செய்த போது திரு.R.ராஜேஸ் அவர்கள் அணிந்திருந்த சட்டை பாக்கெட்டில் இரண்டு மடிப்பாக ரூபாய் 8,800/- மற்றும் ரூ.35,500/- ஆக மொத்தம் ரூ.44,300/-ம் திரு.B.S.கலைச்செல்வன் அவர்கள் அணிந்திருந்த சட்டை பாக்கெட்டில் ரூ.16,500/-ம் காணப்பட்டது. அந்த பணத்தை கைப்பற்றி அவர்களிடம் கேட்ட போது தங்களது சொந்த பணம் என்றும், அதை தங்களது தேவைக்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். அவர்கள் கூறிய விளக்கத்திற்கு சரியான முகாந்திரம் இல்லாததாலும், பணத்துடன் அலுவலகத்தினுள் நின்று கொண்டிருந்ததால் பத்திர பதிவு அலுவலா்களுக்கு லஞ்சம் கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என கருதி அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் தக்கலை பேலஸ் ரோட்டில் உள்ள ஜெயராஜ் பில்டிங்கில் S.V. என்ற பெயரில் பத்திர எழுத்து அலுவலகம் வைத்திருக்கும் திருமதி.சுஜி என்பவரை விசாரித்த போது தனக்கு பத்திரம் எழுதுவதற்கு உரிமம் இல்லை என்றும், ஆனால் பத்திரம் எழுதுவதற்கு அனுபவம் உள்ளதால் தன்னிடம் வருபவா்களுக்கு பத்திரம் தயார் செய்து அதில் தக்கலை மற்றும் குலசேகரத்தில் பத்திரம் எழுதும் அலுவலகம் வைத்திருக்கும் வழக்கறிஞர் திரு.ஜெயகுமார் என்பவரிடம் கையொப்பம் பெற்று பத்திர பதிவு அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்து கொடுப்பதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்த போது அவா் வைத்திருந்த 500 ரூபாய் நோட்டு இரண்டு கட்டுகளை வாங்கி எண்ணி பார்த்த போது அதில் ஒரு கட்டில் 500 ரூபாய் நோட்டுகள் 26 எண்ணமும், மற்றொரு கட்டில் 500 ரூபாய் நோட்டுகள் 74 எண்ணமும் ஆக மொத்தம் ரூபாய் 50,000/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அந்த பணம் இன்றைய பத்திர பதிவுக்காக கிடைத்த பணம் என்று தெரிவித்தார். அவர்கள் கூறிய விளக்கத்திற்கு சரியான முகாந்திரம் இல்லாததாலும், பணத்துடன் அலுவலகத்தினுள் நின்று கொண்டிருந்ததால் பத்திர பதிவு அலுவலா்களுக்கு லஞ்சம் கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என கருதி அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவருடன் நின்று கொண்டிருந்த அவரது அலுவலக உதவியாளர் திருமதி.சுபாஷினி என்பவரை விசாரணை செய்த போது இன்றைய தினம் பத்திர பதிவுக்கு வந்திருந்த திருமதி.சுஜி என்பவருக்கு உதவியாக வந்திருப்பதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்த போது அவா் வைத்திருந்த கைப்பையில் ரூபாய் நோட்டுகள் காணப்பட்டது. அவற்றை எடுத்து எண்ணி பார்த்த போது மொத்தம் ரூபாய் 41,000/- காணப்பட்டது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்ட போது தான் இதற்கு முன்பு அடகு வைத்திருந்த நகைகான வட்டி கட்டுவதற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். அதன்பிறகு நகை அடகு வைத்த ரசீதை கேட்ட போது அவா் கைப்பையிலிருந்து இரண்டு ரசீதுகளை எடுத்து ஆஜா் செய்தார். அதை பார்வையிட்டதில் அவா் பெயரில் அடகு வைத்த

ரசீதுகள் இல்லை என தெரிந்ததால் அதை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த பணத்திற்கு அவர் கூறிய விளக்கத்திற்கு சரியான முகாந்திரம் இல்லாததாலும் பணத்துடன் அலுவலகத்தினுள் நின்று கொண்டிருந்ததால் பத்திர பதிவு அலுவலர்களுக்கு லஞ்சம் கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என கருதி அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இரணியல் காவல் நிலையத்தின் அருகில் வழக்கறிஞர் திரு.ராபர்ட்சிங் என்பவர் வைத்திருக்கும் அலுவலகத்திற்கு பத்திர பதிவிற்காக வரும் பத்திரங்களை தயார் செய்தும், திங்கள் சந்தை SBI வங்கி அருகில் ஜாண்சன் காம்பளக்ஸில் வழக்கறிஞர் திரு.ஜோசப்ராஜ் என்பவர் வைத்திருக்கும் அலுவலகத்திற்கு பத்திர பதிவிற்காக வரும் பத்திரங்களை தயார் செய்து வழக்கறிஞரிடம் கையொப்பம் பெற்று பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவிற்கு உதவியாக இருக்கும் திரு.M.குமார் என்பவரை விசாரணை செய்த போது தான் இன்று ஒரு பத்திரம் பதிந்ததாக தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்த போது அவர் அணிந்திருந்த பேண்ட் இரண்டு பாக்கெட்களிலும் ரூபாய் 75,000/- வீதம் ரூபாய் 1,50,000/-ம், அவர் அணிந்திருந்த சட்டை பாக்கெட்டில் ரூபாய் 7,000/-ம் ஆக மொத்தம் ரூ.1,57,000/- காணப்பட்டது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்ட போது இன்றைய தினம் பதியப்பட்ட ஆவணத்திற்கு கொடுத்த பணம் என தெரிவித்தார். மேலும் அந்த பணத்திற்கு அவர் கூறிய விளக்கம் சரியான முகாந்திரம் இல்லாததாலும் பணத்துடன் அலுவலகத்தினுள் நின்று கொண்டிருந்ததால் பத்திர பதிவு அலுவலர்களுக்கு லஞ்சம் கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என கருதி அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் கைப்பற்றப்பட்ட நபர்களிடமிருந்து தனிதனியாக வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் சார்பதிவாளர் அலுவலக மெயின் ஹாலின் மேற்கு பக்கம் அமைந்துள்ள ஓய்வு அறையை சோதனை செய்த போது அதில் மேஜையின் மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களின் உள்ளேயும், மேஜை விரிப்பிற்கு அடியிலும் சொருகி வைக்கப்பட்டிருந்த ரூபாய் நோட்டுகளை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.8,800/- காணப்பட்டது. அந்த ரூபாய் பற்றி சார்பதிவாளர் அவர்களிடமும், அலுவலர்களிடமும் கேட்ட போது தங்களுக்கு அது பற்றி தெரியாது என தெரிவித்தார்கள். எனவே அந்த பணமும் லஞ்ச பணமாக இருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த அறையை தொடர்ந்து வடக்கு பக்கம் உள்ள கணினி அறையில் Zigma Pvt India Ltd-லிருந்து தற்காலிக பணியாளராக பணிபுரியும் திரு.நாகராஜன் அமர்ந்திருந்தார். அந்த அறையை சோதனை செய்ய துவங்கும்போது சார்பதிவாளர் இருக்கைக்கு வலது பக்கம் அமர்ந்திருந்த திருமதி.சுபா என்பவரும் கணினி அறைக்குள் வந்தார். அந்த அறை சோதனை செய்த போது மேஜையின் மேல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களின் அடியிலும், CD வைக்கப்பட்டிருந்த அட்டை பெட்டியின் உள்ளேயும் ரூபாய்

நோட்டுகள் காணப்பட்டது. அவற்றை எடுத்து எண்ணி பார்த்த போது ரூபாய் 18,200/- இருந்தது. அந்த பணத்தை பற்றி திருமதி.சுபா மற்றும் நாகராஜன் ஆகியோர்களிடம் கேட்ட போது தங்களுக்கு அது பற்றி தெரியாது எனவும், பத்திர எழுத்தர்கள் மற்றும் உதவியாளர்கள் இந்த அறையில் வந்து செல்வார்கள் எனவும், அந்த அறைக்குள் வரவேண்டாம் என கூறினால் தாங்கள் தற்காலிக பணியாளர்கள் என்பதால் தாங்கள் சொல்வதை கேட்கமாட்டார்கள் என தெரிவித்தார்கள். மேலும் சார்பதிவாளர் இருக்கைக்கு அருகில் போடபட்டிருந்த முத்திரை பதிக்கும் மேஜை, ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மேஜை மற்றும் அந்த அறையில் வைக்கபட்டிருந்த அலமாரிகளில் சோதனை செய்ததில் அவற்றில் ஆங்காங்கே தனிதனியாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூபாய் நோட்டுகளை எடுத்து எண்ணி பார்த்ததில் மொத்தம் ரூ.15,000/-காணப்பட்டது. அந்த ரூபாய் பற்றி சார்பதிவாளர் அவர்களிடமும், அலுவலர்களிடமும் கேட்ட போது தங்களுக்கு அது பற்றி தெரியாது என தெரிவித்தார்கள். எனவே அந்த பணமும் லஞ்ச பணமாக இருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சார்பதிவாளர் இருக்கைக்கு முன்பு போடப்பட்டிருந்த மேஜையை சோதனை செய்த போது அதன் மேல் அவர் கைப்பட எழுதிய காகிதம் ஒன்று காணப்பட்டது. அது குறித்து அவரிடம் கேட்ட போது அது இன்றைய தினம் தன்னால் பதிவு செய்யப்பட்ட மொத்த ஆவணங்களின் பத்திர எழுத்தர் விவரங்களை குறித்து வைத்துள்ளதாக தெரிவித்தார். அந்த காகிதமானது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் இருக்கைக்கு அருகில் குப்பைகள் (Waste Paper) போட வைக்கப்பட்டிருந்த அட்டை பெட்டியை சோதனை செய்த போது அதில் பேப்பரால் பொதியபட்ட ஒரு பொட்டலம் காணப்பட்டது. அதை எடுத்து பிரித்து பார்த்த போது அதில் ரூபாய் 4200/- காணப்பட்டது. அந்த பணம் பற்றி சார்பதிவாளர் அவர்களிடம் கேட்ட தனக்கு அதை பற்றி தெரியாது என தெரிவித்தார். மேலும் சார்பதிவாளர் இருக்கைக்கு வலதுபக்க ஓரத்தில் போடப்பட்டிருந்த கணினி மேஜையில் இளநிலை உதவியாளர் திரு.மோகன்பாபு அமர்ந்திருந்தார். அந்த மேஜையை சோதனை செய்த போது அந்த மேஜையின் வலதுபுற டிராயரில் ரூ.3000/- காணப்பட்டது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இன்று பதிவு செய்யப்பட்ட விவரங்களை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து பார்வையிட்டதில் அடமான பத்திரம், உரிமைவைப்பு ஆவணம், உயில் ரத்து பத்திரம், தானபத்திரம், விடுதலை பத்திரம், பரிமாற்ற பத்திரம், ரத்து பத்திரம், செட்டில்மெண்ட் பத்திரம், பாதைஅவகாசம், பாகபிரிவினைபத்திரம், பிழைதிருத்த பத்திரம், ரசீது பத்திரம், விலை பத்திரம், பொது அதிகார பத்திரம் என மொத்தம்-78 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் R/புத்தகம்-I-ல் DOC No.5854/2022 முதல் 5928/2022 பதியப்பட்டுள்ளது. அதன் பின்னர் சார்பதிவாளர் அவர்களிடம் அலுவலக

பணபதிவேட்டை பார்வையிடுவதற்காக கேட்ட போது பணபதிவேட்டு புத்தகம் இங்கு பராமரிக்கபடுவதில்லை என தெரிவித்தார். மேலும் கொடிநாள் பதிவேட்டை கேட்ட போது கொடிநாள் பதிவேடும் பராமரிக்கபடவில்லை எனவும், 04.11.2022-ம் தேதி ரூபாய் 2,600/-க்கு கொடி விற்பனை செய்து வைத்திருப்பதாக தெரிவித்தார். கொடி ரசீது புத்தகத்தை பார்வையிட்டதில் அந்த புத்தகமானது ரசீது எண்.2670501 முதல் 2670600 வரை காணப்பட்டது. அதில் 2670501 முதல் 2670536 வரை ரசீதுகள் கிழிக்கப்பட்டிருந்தது. அதன் அடிகட்டையில் ரசீது வழங்கிய நாள் மற்றும் பெயர், விலாசம் ஏதுவும் காணப்படவில்லை. அந்த ரசீது புத்தகத்தினுள் 04.11.2022 தேதியிடப்பட்ட ரூ.10,000/-க்கான DD.No.669923 காணப்பட்டது. மேலும் ரூபாய் 2,600/- காணப்பட்டது. அந்த பணம் ரூ.2,600/- மீதமுள்ள ரசீதும் மற்றும் DD யும் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலக வருகை பதிவேட்டை பார்வையிட்டதில் உதவியாளர் பொறுப்பு சார்பதிவாளர் திரு.C.சுப்பையா அவர்கள் 03.11.2022, 04.11.2022 ஆகிய தேதிகளில் கையொப்பம் போடவில்லை. மேலும் அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேடு 2021-2022 பார்வையிட்டதில் அலுவலக உதவியாளர் திரு.முருகபெருமாள் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.மோகன் பாபு ஆகியோர்கள் முறையே கையிருப்பு தொகை ரூ.1000/- மற்றும் ரூ.300/- என கையெழுத்து போட்டுள்ளார்கள். மேலும் இயக்க பதிவேடு 2021-2022 பார்வையிட்டதில் 18.10.2022-ம் தேதிக்கு பிறகு பராமரிக்கபடவில்லை. அரசு உத்தரவு மற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுபடி லஞ்சம் பற்றிய புகார்களை தெரிவிப்பதற்காக அரசு தெரிவித்துள்ளபடி லஞ்சம் பற்றிய விழிப்புணர்வு வாசகம் மற்றும் லஞ்ச புகார்களை தெரிவிக்கவேண்டிய தொலைபேசி எண் மற்றும் முகவரி அடங்கிய அறிவிப்பு சார்பதிவாளர் அலுவலகத்தின் முன்பகுதியிலோ அல்லது வேறு பகுதியிலோ பொதுமக்கள் பார்வையில் படும்படி வைக்கப்படவில்லை. சார்பதிவாளரிடம் அலுவலகத்தில் ரொக்க வசூல் எதுவும் உண்டா என்று விசாரித்த போது அரசு கடித எண்.(Ms) No.153, நாள்.05.12.2018-படி ரொக்கமாக வசூல் எதுவும் கிடையாது என்றும் படைவீரர் கொடி-2021 நிதி மட்டும் அவ்வப்போது ரொக்கமாக வசூல் செய்யப்பட்டு அத்தொகைக்கு வங்கி வரைவோலை பெறப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கபடும் என்றும் தெரிவித்தார். இந்த திடீர் சோதனையின் மூலம் இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள உதவியாளர் பொறுப்பு சார்பதிவாளர் திரு.C.சுப்பையா அவர்கள் பத்திர எழுத்தர்கள் மற்றும் அவர்கள் உதவியாளர்கள் மூலம் லஞ்சம் பெற்று அரசு பணிகள் செய்துவருவது தெரியவருகிறது. இதன்மூலம் அரசு அலுவலர்களுக்கு அரசு பணியை செய்வதற்கு இடைதரகர்கள் லஞ்சம் கொடுக்க தூண்டியுள்ள குற்ற செய்கையும் புலனாகிறது. மேலும் பொது ஊழியர்கள் லஞ்சம் பெற்று குற்ற நடவடிக்கையில் (Criminal Misconduct) ஈடுபட்டுள்ளதும் தெரியவருகிறது. இந்த செயல் முறை நடவடிக்கை நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையிலிருந்து

கொண்டு வரப்பட்ட மடிகணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்டர் மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது. இந்த செயல் முறை நடவடிக்கை இன்று 05.11.2022 அதிகாலை 05.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

The original FIR along with the complaint, Proceedings, Seized amount Rs.4,48,800/- and the statement of accused and other documents sent to the Chief Judicial Magistrate cum Special Judge, Kanyakumari District @ Nagercoilfor the trial offences under the PC Act cases and the copied sent to the concerned officers.

5.11.2022.

S. PETER PAUL DURAI
Dy. Supdt. of Police
V&AC, Kanyakumari
Detachment @ Nagercoil.